2019 ஜூலை 12]

அதில் பல துறைகளினுடைய அனுமதியைப் பெறுவதிலே காலதாமதம் ஆகிவிட்டது. அதனால், புதிய முறையிலே, trenchless *என்று சொல்லக்கூடிய, அப்படியே துளை போட்டுக் கொண்டு செல்லக்கூடிய வகையில் செய்வதற்கு டெண்டர் விடப்பட்டு இப்போது கொளத்தூர் பகுதியில் அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இதுகாறும் 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு பணிகள் முடிந்திருக்கின்றன. கொளத்தூர் பகுதியில் மட்டும் இன்னும் ஓராண்டு காலத்திற்குள் அந்தப் பணிகள் முடிந்துவிடும். மற்ற பகுதிகளில் 2 ஆண்டுக் காலம் ஆகிவிடும். ஏனென்று சொன்னால், பல பகுதிகளிலே இரவு நேரங்களில்தான் அந்தப் பணிகளை மேற்கொள்ள முடிகிறது. பகல் நேரங்களிலே செய்ய முடியவில்லை. அதனால்தான் காலதாமதம் ஆகிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, 2,567 கோடி ரூபாய் என்பது சென்னை பெருநகர் மாநகரத்திற்கு மட்டும். தமிழ்நாடு முழுவதற்கும் இல்லை. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, 6,531 கிலோ மீட்டர் அளவுக்கு உயர் மின்னழுத்த மற்றும் தாழ்வு மின்னழுத்தக் கம்பிகளை புதைவடத் தடமாக போடவேண்டும். மக்களின் பாதுகாப்பு முக்கியம் என்பதை அறிந்துதான் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு இந்தப் பணியை செய்துகொண்டிருக்கிறது.*

அதேபோல, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நேர்மை நகரிலே துணை மின் நிலையத்தை அமைக்க வேண்டுமென்று ஏற்கெனவே கேட்டிருந்தார்கள். இப்பொழுது 90 சதவிகித பணிகள் முடிவு பெற்றிருக்கின்றன. இன்னும் ஒன்றிரண்டு மாதங்களில் அந்தப் பணிகள் முடிந்துவிடும். அதேபோல, கணேஷ் நகர் பகுதியைப் பொறுத்தவரையில், 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு டெண்டர் கோரப்பட்டிருக்கின்றது. அந்தப் பணிகளையும் விரைந்து முடிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

94—

சமுதாயக் கூடம்

***6343—திரு. சே. கருணாஸ்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியம், வரவணி கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியம், வரவணி ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.*

திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3–7–2019 அன்று எனது முக்குலத்தோர் சமூகம் உட்பட 68 சமூகத்தைச் சார்ந்த மக்களுக்கான* DNT *சான்றிதழ் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை வைத்தேன். நான் உட்பட நிறையபேர் அந்தக் கோரிக்கைகளை முன்னெடுத்தோம். அனைவருடைய கோரிக்கையையும் ஏற்று, வெறும் ஐந்து நாட்களில்* DNT *சான்றிதழ் கிடைக்க வழிவகை செய்த அம்மாவின் அரசுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு*

2019 ஜூலை 12]

முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவாடனை தொகுதியிலே நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த, மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரியை அமைத்துக் கொடுத்த அம்மாவின் அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக கோடானு கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியம் முழுவதும் கிராமப் பகுதிகளை உள்ளடக்கியதாகும். இந்த கிராம மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான வரவணி கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைப்பதற்கு ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்துதர மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, திருவாடனை மக்களின் சார்பாகவும், முக்குலத்தோர் புலிப்படை இயக்கத்தின் சார்பாகவும் கேட்டறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியம், வரவணி ஊராட்சியில் சுமார் 2,110 மக்கள் வசிக்கின்றனர். இப்பகுதியில் சமுதாயக் கூடம் கட்டுவதற்குப் போதுமான இட வசதி உள்ளது. சமுதாயக் கூடம் அமைக்க தோராய மதிப்பீடு 23 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் ஆகும். இப்பகுதியில் அனைத்து சமுதாயத்தினரும் வசித்து வருவதால் சமுதாயக் கூடம் கட்டுவது அவசியமாகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதைத்தான் குறிப்பிட்டார்கள். எனவே, வரவணி ஊராட்சியில் சமுதாயக் கூடம் கட்டுவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு சென்று கண்டிப்பாக, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு*

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

திரு. சே. கருணாஸ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, அந்த DNT சான்றிதழை மிகக் குறுகிய காலத்திற்குள் வழங்குவதற்காக மிகவும் சிரத்தை எடுத்துக் கொண்ட மாண்புமிகு துணை முதலமைச்சர் ஐயா, ஓ.பி.எஸ். அவர்களுக்கும், அவை சார்ந்த அமைச்சர் பெருமக்களுக்கும், ஒட்டுமொத்த 68 சமூகத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

95—

கால்நடைக் கிளை நிலையம்

***7171—திருமதி மு. பரமேஸ்வரி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணச்சநல்லூர் தொகுதி, மணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம், சா. அய்யம்பாளையம் ஊராட்சியில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10—25

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சி மாவட்டம், மணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சா. அய்யம்பாளையம் கிராமத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய புதிய கால்நடைக் கிளை நிலையம், அரசாணை எண் 14, கால்நடை பராமரிப்பு,